பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 20 சனிக்கிழமை (05-12-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 09

# றொனிடிமெல் மீதான வழக்குத் தள்ளுபடி!

## குற்றச்சாட்டுகளை அரசு வாபஸ்; நாடு திரும்பியதும் அரசில் சேர்வார்

கொழும்பு, டிசம்பர் 5

முன்னாள் நிதி அமைச்சர் திரு. றொனி டி மெல்லுக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று உயர்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

திரு. றொனி டி மெல் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசாங்கத்தினால் நிருபிக்க முடியவில்லை என்று தெரிவித்தே நீதியரசர் வீரசூரியா வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

அரசாங்கப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தினார் என்பதே முன்னாள் நிதியமைச்சர் மீதான பிரதான குற்றச்சாட்டாகும்.

இப்போது வெளிநாட்டில் உள்ள றொனி டி மெல் இம்மாதம் 14 ஆம் திகதி நாடு திரும்புவார். அவர் அரசாங்கக் கட்சியில் சேர்வார் என்று ஏற்கனவே ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

திரு. மெல் மீது சுமத்தப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களையும் வாபஸ் பெறுவதாக அரச சட்டத்தரணி திரு. மொஹான் பீரிஸ் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்திருந்தும்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் ஒருவாரமாக

## காலநிலை சீரில்லாததால் தாக்குதல் ஏதும் இல்லையாம்

யாழ். குடாநாட்டில் காலநிலை சீராக இல்லாத காரணத்தினால் கடந்த ஒருவார காலமாக எதுவித தாக்குதலும் இடம்பெறவில்லை.

பிரிகேடியர் ஆங்கமன இத்தகவலைத் தெரிவித்தார்.

விமான நடவடிக்கைகளும் இடம் பெறவில்லை என்றும் அவர் கூறினார். (உ-எ)

### 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

## பொஸ்கோ மாணவன் அகில இலங்கையில் முதலிடம்

### சுண்டுக்குளி, ஆனைப்பந்திக்கு 2ஆம் இடம்

யாழ்ப்பாணம், டிச. 5

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மொத்தம் 756 மாணவர்கள் புலமைப் பரிசிலுக்குத் தெரிவாகி உள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன் செல்வன் கா. பிரந்தாபன் அகில இலங்கை ரீதியிலும், யாழ். மாவட்ட ரீதியிலும் முதலாவது இடத்தைப் பெற்றுச் சாதனை நிலைநாட்டியுள்ளார். இவர் பெற்ற மொத்தப் புள்ளிகள் 199 ஆகும். இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. காந்தகுமார் தம்பதிகளின் புதல்வராவார்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஏ. செகராசாவும், ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் எஸ். மோகனஜீவ்வும் 197 புள்ளிகளைப் பெற்று

(2 ஆம் பக்கம் பார்க்க)



செல்வன். கா. பிருந்தாபன்

### கடலில்

## கைதானோரில் 912 பேர் தமிழர்

கொழும்பு, டிச. 5

மீன் பிடிப்பதாகக் கூறி தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்கு கடல் மார்க்கமாகச் சென்றவர்களில் இதுவரை ஆயிரத்து 7 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 912 பேர் தமிழ் இளைஞர்கள்.

பாதுகாப்பு அமைச்சு நேற்று கண்டவாறு தெரிவித்ததாக சிங்கள நாளிதழான தினமின செய்தி வெளியிட்டிருக்கிறது.

(இ-எ)

## அவ்ரோ நோட்டம்

யாழ்ப்பாணம், டிச. 5

அவ்ரோ விமானம் ஒன்று நேற்று நண்பகல் குடாநாட்டின் பல பகுதிகளையும் நோட்டமிட்டுச் சென்றது.

(இ-15)

## குமாரி கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், டிச 5

குமாரி கப்பல் எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

காலநிலை சீராக இருந்ததால் 'குமண' கப்பலில் இருந்து நேற்று விரைவாகப் பொருட்கள் இறக்கப்பட்டன என்றும்—

இன்று "குமண" கப்பல் கொழும்பு நோக்கிச் செல்லும் என்றும்—

காங்கேசன்துறையில்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடி எல்லையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

### கவச வாகனங்கள், ஆயுதங்கள் குவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

மட்டக்களப்பு - காத்தான்குடி எல்லைப்புறப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்று தெரியவந்தது.

கடலின் ஊடாகவும் ஆற்றின் ஊடாகவும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தால் அந்தப் பகுதியில் கவச வாகனங்கள், பீரங்கிகள் போன்ற கனரக வாகனங்களையும் ஆயுதங்களையும் படையினர் குவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி எல்லைப்புறத்தில் உள்ள முஸ்லிம்களையும் படையினர் வேறு இடங்களுக்கு மாற்றியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## வடக்கு கடற்படைத் தளபதி கொமடோர் தயா சந்தசிறி

### கிழக்கிற்கு தஸநாயக்க நியமனம்

வடபிராந்திய கடற்படைத் தளபதியாக கொமடோர் தயா சந்தகிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படைத் தலைமையகத்தில் செயற்பாட்டுப் பணிப்பாளராக இவர் செயற்பட்டு வந்தார்.

அராலித்துறை கண்ணிவெடியில் வடபிராந்திய கடற்படைத் தளபதி மொஹான் ஜெயமகா பலியானதை அடுத்து, தற்காலிக தளபதியாக கடமை புரிந்த கொமடோர் சிறில் தெசேரா கடற்படையின் பிரதம உத்தியோக அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கடந்த பல வருடங்களாக கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாகக் கடமை புரிந்துள்ளார்.

இதேசமயம், வடபிராந்திய கடற்படைத் தளபதியாக இருந்த கப்டன் டி. கே. தஸநாயக்கா கொமடோர் தரத்துக்கு உயர்த்தப்பட்டு, கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ)

## வினாத்தாள்களில் ஒரு தொகுதி நேற்று இங்கு வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், டிச. 5

ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கான முதல் ஐந்து தினங்களுக்கான வினாத்தாள்கள் நேற்று வந்து சேர்ந்தன.

இந்த வினாத்தாள்கள் விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு, காங்கேசன்துறையில் இருந்து "குமண" கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

அதேசமயம் இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் 11ஆம் திகதி விமானம் மூலம் எடுத்துவரப்படவிருக்கிறது — என்று தெரிவிக்கப்பட்டது. (இ-8)

### ஜி. சீ. ஈ. பரீட்சை:

## அஞ்சல் அடையாள அட்டை விநியோக வேலை ஆரம்பம்

### பரீட்சார்த்திகள் கஷ்டம் நீங்கியது

யாழ்ப்பாணம், டிச. 5

நாளை மறுதினம் ஆரம்பமாகவிருக்கும் ஜி சீ ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு அஞ்சல் அடையாள அட்டைகள் கிடைக்கவுள்ளன. ஆதனால் அவர்களது அவலநிலை நீக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான வெற்று அட்டைகள் நேற்றுத் தரை மார்க்கமாகத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவரால் எடுத்துவரப்பட்டதனால் மாணவர் பரீட்சார்த்திகள் எதிர் நோக்கிய கஷ்டம் தவிர்க்கப்பட்டுள்ளது.

அஞ்சல் அடையாள வெற்று அட்டைகள் நேற்றுத் தரைமார்க்கமாக யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டதை அடுத்து பிரதி அஞ்சல் மா அதிபரின் எல்லை நிர்வாக காரியாலயம் களும் தமது வழமையான சகல வேலைகளையும் இடைநிறுத்தி விட்டு, அடையாள அட்டைகள் விநியோகத்தில் துரிதமாக ஈடுபட்டுள்ளன.

8 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் இன்னும் அடையாள அட்டைகள் பெறவேண்டியுள்ளதால் நேற்றிரவும் "பெற்றோல்மக்ஸ்"

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வு இன்னும் தொலைவில்

## வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, டிச. 5

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் நாம் இன்னும் எவ்வளவோ தொலைவில் இருக்கிறோம். நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார முன்னர் இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் அரசு சடுபட்டுள்ளது என்பதை நம்பச் செய்வதிலேயே நாடாளுமன்றத் தெரிவுக்குழு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் திரு நாணயக்கார கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு காலத்தை விரயம் செய்யும் ஒரு முயற்சியாகும். ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நிலையில் நாடு இருப்பதாகக் கூறப்படுவதை நான் நம்பத் தயாரில்லை"— இப்படி அவர் கூறினார்.

இதற்கிடையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளை திரு. நாணயக்கார பகிஷ்கரித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]


மீண்டும் மீண்டும் சாதனைகள்!

கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில்

எமது மாணவர்கள் —

★ பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியவர்கள் —
★ மாதிரிப் பரீட்சைகளில் பங்குபற்றியவர்கள் —

அள்ளி எடுத்த பெறுபேறுகள்

இம்முறையும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. எமது கல்வி நிறுவனத்தின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி அகில இலங்கையிலும் புகழ்பெற்றுள்ள இம்மாணவர்களை உளமார வாழ்த்துகிறோம்.

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் [சி/3954]



புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்.

நிர்வாக சேவை [S. L. A. S]

போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

- 1) நுண்ணறிவு
- 2) பொது உளச்சார்பு
- 3) பொது வினாத்தாள்

ஆசிரியர் அ. குமாரவேல்

ஆரம்பம் 5 - 12 - 92 பி. ப. 4.00 (C 3850)



உதயன்

அக்கடமி

நல்லூர்

புதிய வகுப்புகள் ஆரம்பம்

05-12-1992

சனி பிற்பகல் 3.00 மணி.

ஆண்டு 4 முதல் O/L வரை

ஆரம்பமாகின்றது.

(யாழ். நகர் முன்னணி பிரபல கல்லூரி ஆசிரியர்களின் ஒருங்கிணை சேவை)

[23511]


## நாளை

பருத்தித்துறை கூட்டுறவுக் கோட்டத்தில் உள்ள தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்க மகளிர் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கான யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கல்வித் திட்ட பயிற்சி வகுப்பு நாளை ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

கட்டைவேலி நெல்லியடி கூட்டுறவுக் கோட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்க மகளிர் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கான மேற்படி பயிற்சி வகுப்பு நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல் 5 மணிவரை கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும். [ஒ-க-162]

## குமாரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தரித்து நிற்கும் 'மெரினாக்' கப்பல் நாளை பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'குமாரி' கப்பலில் உணவுப் பொருள்களுடன், தபால் பொதிகளும் எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## பொஸ்கோ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அகில இலங்கை ரீதியிலும், யாழ். மாவட்ட ரீதியிலும் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

புலமைப் பரிசிலுக்குத் தெரிவாகுவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வெட்டுப் புள்ளி இம்முறை மொத்தம் 200 புள்ளிகளுக்கு 136 ஆகும். யாழ். மாவட்டத்திலிருந்து மொத்தம் 12 000 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகக் கூடிய மாணவர்கள் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலிருந்தும், யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலிருந்துமே புலமைப் பரிசிலுக்குத் தெரிவாகியுள்ளனர்.

புனித ஜோன் பொஸ்கோவிலிருந்து தோற்றிய 186 மாணவர்களிலிருந்து 71 பேர் புலமைப்பரிசிலுக்குத் தெரிவாகியுள்ளனர். யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலிருந்து தோற்றிய 165 மாணவர்களில் 59 பேர் புலமைப்பரிசிலுக்குத் தெரிவாகியுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று வருவதற்காக யாழ். கல்விப் பணிமனையைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா சென்றிருந்தார்.

பரீட்சைத் திணைக்களத்தில் நடந்த பெறுபேறுகள் கையளிப்பு வைபவத்தில், யாழ். மாவட்டத்தின் போர்ச் சூழ்நிலையிலும் மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றது குறித்து கொழும்பு அதிகாரிகள் பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்தனர். (அ-8)

# 7 பேர் மட்டும் தோற்றும் பரீட்சை நிலையம்

யாழ்ப்பாணம், டிச. 5

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்காக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இளவாலையில் பரீட்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இளவாலை ஹென்றீஸ் வித்தியாலயத்தில் அமையவுள்ள இப்பரீட்சை நிலையத்தில் 7 பரீட்சார்த்திகள் மட்டும் பரீட்சை எழுத உள்ளனர்.

இவர்களுக்கான அனுமதி அட்டைகளும், வினாத்தாள்களும் விமான மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

அதேசமயம் தீவுப்பகுதியில் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள், வினாத்தாள்கள் ஆகியவையும் விமானத்தில் எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]


O/L 92

SALE

O/L அனைத்துப் பாடங்களுக்குமான மாதிரி வினாத்தாள்கள்

50% கழிவு விலையில்

இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

BOND

யாழ்ப்பாணம் (சி-3953)



தேவை

ஓய்வுபெற்ற M. L. T. தேவை
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

சம்பந்தன் வைத்திய நிலையம்
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[இலங்கை வங்கிக்கு அருகாமையில்] [23509]



அறிவித்தல்

சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்

விசேட பொதுக்கூட்டம் 9-12-1992

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 9-12-1992 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம்) சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் செயலாளர்
வல்வெட்டித்துறை ப. நோ. கூ. சங்கம்

முக்கிய குறிப்பு:- கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாதோர் தமக்கு கிளையிலோ அல்லது தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடனோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பங்குப் பணம்: ரூ 100/-. 6 - 3 - 1992 இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உபவிதி 18(1) இன்படி ஒரு பங்கின் பெறுமதி ரூ. 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூ 100/- ஆக வைத்திருக்காதவிடத்து நடைபெறும் பொதுச்சபைத் தேர்தலிலோ பொதுச்சபையிலோ நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே 31-1-1993 க்கு முன்னர் தங்கள் பங்குப் பணத்தை ரூ 100/- ஆக ஆக்கிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர் தலைவர்
[C/2801]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் தேவை

6, 7, 8, 9ஆம் ஆண்டுகளுக்கான

● கணிதம் ● விஞ்ஞானம்
● தமிழ் ● ஆங்கிலம்
● சமூகக்கல்வியும் வரலாறும்

ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு, கற்பித்தலில் ஆர்வமும் அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் தேவை; ஆர்வமுள்ளவர்கள் பிற்பகல் 3-00 — 5-00 மணிவரை நேரில் வரவும்.

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 3934]



## ஒஸ்லோ கல்வி நிலையம்

கச்சேரி நல்லூர் வீதி.

### கல்வி ஆண்டு - 1993

### O/L

ஆண்டு 10, 9, 8, 7, 6, 5, 4ஆம் வகுப்புகள்

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. பாபு (மகேந்திரன்) |
| | — திருமதி கருணைநாயகம் |
| கணிதம் | — திரு. ஜெயக்குமார் |
| | — செல்வி திலகா |
| தமிழ் | — திரு. கதிர்காமத்தம்பி |
| | — திருமதி ஜனதா ஜோர்ச் |
| ஆங்கிலம் | — திரு. ரவி |
| | — திரு. சிவலிங்கம் |
| சமூகக்கல்வி | — திரு. அமலசீலன் |
| | — செல்வி குமாரி |
| வர்த்தகம் | — திரு குணா |

ஆரம்பம்: 06 - 12 - 1992 (ஞாயிறு)
காலை 9-00 மணி

[சி-3949]



## O/L DEC. 1993

வருடாவருடம் சிறந்த பெறுபேறுகளையே பெற்றுத் தரும் எமது வழமையான ஆசிரியர் குழு

★ கணிதம் ★ விஞ்ஞானம்
★ தமிழ் ★ சமூகக்கல்வி
★ ஆங்கிலம் ★ சமயம்
★ வர்த்தகம் ★ விவசாயம்
★ சித்திரம் ★ மனைப்பொருளியல்
★ சங்கீதம் ★ நடனம்

ஆகிய அனைத்துப் பாடங்களுக்குமான புதிய வகுப்புகளுடன்

### 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் ஆண்டு வகுப்புகளும்

ஆரம்பம்: 05 - 12 - 1992

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-3937]


பட்டினியால் இறந்து கொண்டிருக்கும்

# சோமாலிய மக்களுக்கு உதவ

# ஐ.நா.ராணுவரீதியில் தலையீடு

## 28 ஆயிரம் வீரர்களை அமெரிக்கா அனுப்பும்

வாஷிங்டன், டிச. 5

உள்நாட்டு யுத்தம் மற்றும் வரட்சி காரணமாக பட்டினியால் இறந்து கொண்டிருக்கும் சோமாலிய நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் உதவவென, அந்த நாட்டில் இராணுவ ரீதியில் தலையிடுவது என்று ஐ. நா. பாதுகாப்புச்சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

உறுப்பு நாடு ஒன்றின் உள் விவகாரத்தில் ஐ. நா. இராணுவ ரீதியில் தலையிடுவது ஐ. நாவின் சரித்திரத்தில் இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடுகளின் உள்விவகாரத்தில் தலையிடுவதற்கு பாதுகாப்புச் சபை அனுமதி அளித்ததன் மூலம் ஐ. நாவின் பணி புதிய பரிமாணம் பெறுகின்றது என்று ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்தார்.

''சரித்திரப் புகழ்வாய்ந்த தீர்மானம் இது''— என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

சோமாலிய மக்களுக்குச் சர்வதேச சமூகம் அளித்து வரும் நிவாரண உதவிகளை அந்த நாட்டு மக்களுக்கு சீராக விநியோகம் செய்வதை அங்குள்ள கொள்ளைக்காரர்கள் தடுத்து வருவதாகவும்—

அதனைத் தடுத்து நிறுத்தி நிவாரண வேலைகளை சீராக மேற்கொள்ளவே இராணுவத் தலையீடு மேற்கொள்ளப்படுவதாகவும் ஐ. நா. பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

ஐ. நாவின் முடிவின்படி— அமெரிக்கா, 28 ஆயிரம் படையினரை சோமாலியாவுக்கு அனுப்பிவைக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், புதிய ஜனாதிபதி பில் கிளின்டனுடன் பேச்சுக்கள் நடத்தினார் என்றும்—

அமெரிக்கப் படையினர் சோமாலியாவுக்கு அனுப்பப்படுவதை திரு கிளின்டன் வரவேற்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வேறு ஒன்பது நாடுகளும் தமது படைகளை சோமாலியாவுக்கு அனுப்பப்போவதாக அறிவித்துள்ளன. (உ-ஏ)

## இன்று

மெய்கண்ட தேவர் ஆதீனச் சைவசித்தாந்த உயர் நிறுவனத்தின் ஆதரவில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் மூதறிஞர் க. சி. குலரத்தினம் நிகழ்த்தும் சைவ சித்தாந்த உரை விளக்கம் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும். (க)

★ ★ ★

உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவர்களின் ஒளி விழா நிகழ்ச்சி இன்று காலை 9-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

''விவசாயத்தின் முக்கியத்துவமும் அதன் அபிவிருத்தியும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று, இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் வலிகாமம் பிரிவினர் இக் கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளனர்.

★ ★ ★

வல்வெட்டித்துறை, டிச. 5

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த பெற்றோர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் வித்தியாலய அதிபர் திரு செ. சதானந்தன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரையும் சிறப்பு விருந்தினராக வடமராட்சிப் பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சு. அரசண்ணா மற்றும் திரு.

## மாவீரர் வாரத்தின்போது சுய தொழில் வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

மாவீரர் வாரத்தின்போது நாவாந்துறைப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 31 வறிய குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன. சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக இவ் உதவி வழங்கப்பட்டது.

கடற்புலிகளின் விசேட தளபதி சூசை அண்மையில் இதனை வழங்கினார்.

சமூக மேம்பாட்டிற்கான இவ் உதவித் திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தயாரித்து வலி. வடக்கு, வலி. கிழக்கு, வலி. தெற்கு, வலி. மேற்கு, தீவகம் ஆகிய ஒன்றியங்கள் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வலைக்கான பெறுமதி மீளச் செலுத்தப்படும்போது அந்நிதியைக் கொண்டு புதிய வலைகள் கொள்வனவு செய்யப்பட்டு மேலும் புதிய பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)


இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும்

''நாக பாசம்''

## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 06 02-1993 — 08-02-1993

திறப்பு விழா: 06-02-1993 சனிக்கிழமை

நிதியுதவி நிகழ்ச்சி

முதலாம் நாள்:
07 — 02 — 1993 ஞாயிறு
மாலை 5 தொடக்கம் இரவு 10 வரை.

நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன் குழுவினர்
நாட்டியக் கலைமணி எம். அருள்மோகன் (பரத நாட்டியம்)
மெல்லிசை வாணர் ஜி. சாந்தன் குழுவினர் எழுச்சிப் பாடல்கள்

இரண்டாம் நாள்:
08 — 02 — 1993 திங்கள்

நாதஸ்வர இரட்டையர்கள் வி. கே. கானமூர்த்தி — பஞ்சமூர்த்தி குழுவினர்
இசைக் கச்சேரி
இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் குழுவினர்
இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்

### 'இன்னிசை வார்ப்புகள்'

மெல்லிசை நிகழ்ச்சி

(முன்னணி மெல்லிசைக் கலைஞர்கள் சாந்தன், பௌசி, வர்ண ராமேஸ்வரன், பார்வதி சிவபாதம், மிதிலா விவேகானந்தன், செல்வி ராதிகா சுப்பிரமணியம்)

நுழைவுச் சீட்டு:
நாள் ஒன்றுக்கு 500/-, 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

[சி-3919]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு வாத்து (மணி தாரா) விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல: 3, சிவியர் ஒழுங்கை, (தட்டார தெரு சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (23501)

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ½ பரப்பு காணியுடன் கிணறு. மலசலகூட வசதியுள்ள வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்: எஸ். கனகரட்ணம், 465/1 கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். (23503)

கண்ணாடி, ஹோல் சோக்கேஸ் புத்தக ராக்கி, றோணியோ- இயந்திரம், மேசை வாச்சிகளுடன், வேப்பம் பலகையிலான உடுப்பு வைக்கும் அலுமாரி தொடர்பு: இல. 65 185, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (5612)

### விற்பனையாகிறது

ஆலயோடு எதிர்பார்த்திருந்த சித்திரம் (அலங்காரங்களும், விளக்கப்படங்களும்) தொகுதி I விற்பனையாகின்றது எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: யசோ. வெளியீடு: நடுவுத் துருத்தி. விநியோகம்: ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (23469)

G. A. Q. கம்பராமாயணம் வாலி வதைப்படலம், பத்மாவதி சரித்திரம், தமிழ் இலக்கணம், B. A. நாச்சியார் திருமொழி, வெள்ளிப்பாதசரம் ஆகிய வகுப்புகளுக்குரிய புத்தகங்கள் விற்பனையாகின்றன; பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-3841)

### சங்கீதம் வினா - விடை

சங்கீதம் வினா - விடை (ஆண்டு 10-11) விற்பனையாகிறது: ஆக்கம் செல்வி "அநேகா" (O/L) பரீட்சையில் உச்சப் புள்ளிபெற உதவும்வழிகாட்டி. முந்நூற்றுக்கு மேற்பட்ட வினாக்களுக்கு விரிவான விடைகள், இராகலட்சணங்கள், இசைக்குறிப்புகள் கொண்டது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23444)

### சலவைத்தூள்

மின்லைற் சலவைத்தூளின் சக்திமிக்க நுரைவளம் துரித சலவைக்கு உதவுகிறது. சிறு உடைக்குப் பளிச்சிடும் வெண்மை வண்ண உடைக்கு மேலும் பிரகாசம் அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது 25 வெற்றுப் பக்கற் சேர்ப்பித்து அப்பியாசக்கொப்பி ஒன்றைப் பெறுங்கள். மின்லைற் (சி 3951)

### புலமைப்பரிசில் வகுப்புகள்

புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆண்டு 4, ஆண்டு 5, புதிய வகுப்புகள் 05-12-92 சனி பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முழுவதும் ஆவணிக்கு முன் பூர்த்தியாக்கப்படும். பயிற்சிப் பரீட்சைகள் மாதம் மாதம் நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219. நாவலர் வீதி யாழ்ப்பாணம். (23480)

### திருவிளக்குப் பூஜை

திருவிளக்குப் பூஜை தத்துவமும், வழிபாடும் என்ற கைநூல் விற்பனைக்குண்டு; ரூபா 20/-. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (23467)

### உங்கள் குழந்தைகளுக்கு

ஆரம்பக் கல்வி பயிலும் உங்கள் குழந்தைகளுக்கு இனிய பாடல்களைப் படங்களுடன் தரும் நல்ல நூல்கள் "பூந்தோட்டம்" "ரோஜாப்பூ" ஆசிரியர் "கோப்பாய் சிவம்" பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு நன்கு பயன்படும் (23479)

### மணமகள் தேவை

பிரான்ஸில் நிரந்தர வீசாவுடன் தொழில் புரியும் யாழ். இந்து, உத்தரட்டாதி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றம் அற்ற 33 வயது மணமகனுக்கு 28 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்யலாம். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 467, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (23452)

### நல்லினத் தோடை

விவசாயத்திற்கு ஒட்டிய ஒரு வருடத்தில் பலன்தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள் விற்பனைக்குண்டு. இடம்: துரை ஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர். (5440)

### வெளிவந்துவிட்டது

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா-விடை புள்ளி விபரத்துடன் விற்பனைக்கு உண்டு; மேலும் விபரங்களுக்கு 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3793)

### தவறிவிட்டது

பொன்னன் அமிர்தராசா ஆகிய எனது தே. அ. அட்டையும் (இல: 610262406 V) லங்கா சிமெந்து லிமிடெட் அடையாள அட்டையும் (இல; 10233), அடங்கிய கறுப்பு வெற்றுப் பேர்ஸ் காங்கேசன்துறையிலுக்கும் யாழ்; போதனா வைத்தியசாலைக்கும் இடையில் 26-11-92இல் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (23490)

குமுழமுனை, காரைநகரைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி காசிநாதனின் தேசிய அடையாள அட்டை 30 - 11 - 92 அன்று இராமநாதன் வீதிக்கும், சங்கிலியன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல 42, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (23505)

### உங்கள் நண்பருக்கு

ஆண்டிறுதியில் உங்கள் நண்பர்களைப் பிரியும் போது உங்கள் அன்பை நினைவூட்ட வேண்டாமா? ஒட்டோகிராப்பில் கையெழுத்திடும் போது எழுதச் சிறந்த பொன்மொழிகளுக்கும் அன்பளிப்புச் செய்யவும் உகந்த புத்தகம். "பொறுக்கிய முத்துக்கள்" கோப்பாய் சிவம். (23478)

### வாடகைக்கு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் வீடு வாடகைக்குக் கொடுக்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும். "அனெக்ஸ்" ஆக கொடுக்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். இல; 466, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (23436)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்: 10 — 02 — 1934



விண்ணில்: 06 — 11 — 1992

தெல்லிப்பளையைச் சேர்ந்த

## அமரர் ரி. பி. பத்மநாதன்

(ரி. பி. மாஸ்டர்)

06 - 12 - 1992 ஞாயிற்றுக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளிலும், மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமகன்,

'சினேகி',
கன்னியங்கம் வீதி,
(துரை வீதி வடபால),
தாவடி வடக்கு. கொக்குவில். (23494)

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 1993

ஆண்டு 9, 10, O/L

புதிய பிரிவுகள்!

ஆரம்பம்: 05 - 12 - 1992

(இ-3840) சனி பி. ப. 3 மணி

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 02 — 02 — 1928



இறப்பு: 18 — 11 — 1991

திருமதி

## மகேஸ்வரி பாலசுப்பிரமணியம்

திதி: 05 — 12 — 1992


எம் குடும்ப விளக்காக விளங்கி எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி மறைந்த எமது அன்னையின் முதலாம் ஆண்டை இன்று நினைவு கூருகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

மா. பாலசுப்பிரமணியம்,
77, நாயன்மார் வீதி,
நல்லூர். (23498)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்: 02 — 03 — 1974



நீர்ச் சுனையில்: 17 — 11 — 1991

அமரர்

## நடராசா ரகுதராஜன்

திதி: 05 — 12 — 1992

சீர்மேவும் கொக்குவிற் பதிதனிலே
சிறப்புயர் நடராசா செல்வராணிசெய் தவப்பயனாய்த்
தாரணியில் வந்துதித்த ரகுதராஜனே!
அன்பு, பண்பு, பாசம், அறிவாற்றல் நிறைந்தவனே!
விதியின் சதியால் கற்புலத்தம்பாள் கேணியிலே
ஆண்டொன்றின் முன்னால் அணைந்த தீபமாகினையே!
நின்பிரிவுத்துயர் தாங்காது பாசமிகு பெற்றோரும்
சோதரன் கிஷசுதனும் சோதரிகள் துஷ்யந்தியோடு
பிரியதர்சினியும், உற்றார், உறவினர், நண்பர்களும்
உன்நினைவை மீட்டிங்கே-
சாற்றுகின்றோம் அஞ்சலிகள்!
கற்புலத்தன்னை அருள்மிகு மனோன்மணியின்
பாதார விந்தத்தில்
நித்திய மலராய் வீற்றிருந்து நிறைவான சாந்திபெற!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெற்றோர், உடன்பிறப்புகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கலைவாணி வீதி,
பொற்பதி றோட்,
கொக்குவில். (23484)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவு போன பொருள்கள் சிறிது நேரத்திலேயே மீட்பு

## குருநகரில் காவல்துறை சாதனை

நேற்று முன்தினம் அதிகாலை யாழ். குருநகர் பாமிஷான் வீதியிலுள்ள வைசாக்குக் கடையொன்று உடைத்து பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன. எனினும் காவல் துறையினரின் தீவிர தேடுதலை அடுத்து சில மணி நேரத்துக்குள்ளாகவே களவு போன பொருள்கள் மீட்கப்பட்டன.

ரொக்கப்பணம் மற்றும் பிஸ்கட், பால்மா வகைகள், சிகரட், பற்றறி போன்ற பொருள்கள் உட்படச் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருப்பதாக கடை உரிமையாளர் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் காவல் துறைப் பணிமனைக்குச் சென்று தகவல் கொடுத்திருந்தார்.

நேற்று முன்தினம் காலை 7-30 மணியளவில் சின்னக்கடை பாமிஷான் வீதி வீடொன்றைச் சோதனையிட்ட காவல்துறையினர் மேற்படி பொருள்களை மீட்டனர் என்று அறியவருகிறது.

இவ்வளவு விரைவாக திருட்டைக் கண்டுபிடித்து பொருள்களை மீட்ட தமிழீழக் காவல் துறையின் யாழ். பணிமனையை இப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டினர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் சம்பந்தமாக இருவரை காவல் துறையினர் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

(உ-17-51)

# அரியாலைப் பகுதி முகாம்களில் வெள்ளத்தினால் மக்கள் அவதி

அரியாலை, டிச. 5

அரியாலைப் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் திவக அகதி மக்கள் இவ்வாரம் பெய்த மழையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பூம்புகார் அண்ணாகோப்பி முகாமும், மணியரசன் வீடமைப்புத் திட்டமும் இவ்வாரத்து மழையினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த முகாம்களுக்குள் வெள்ளம் புகுந்திருப்பதால் மக்கள் அங்கு தங்கியிருக்க முடியாத பெரும் அவதிப்படுகின்றனர்.

முகாம்களுக்குள்ளும் வெள்ளம் நிற்பதால் சமைப்பதற்கோ, உறங்குவதற்கோ இயலாமல் மக்கள் அவஸ்தைப்படுவதைக் காணமுடிந்தது.

குறிப்பிட்ட இரண்டு அகதி முகாம்களிலும் தங்கியுள்ள மக்கள் உறங்குவதற்கு பாய் மற்றும் உடுபுடவை வசதியின்றியும் அவதிப்படுகின்றனர்.

இம்முகாம்களிலுள்ள மலசல கூடங்களுக்குள்ளும் மழைநீர் புகுந்துவிட்டது இதனால் இம்முகாம்களில் வாழும் மக்களுக்கு தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது.

எவரேனும் கவனிப்பாரற்று நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எமது முகாம் பகுதிகளில் மண்ணை நிரப்பி வெள்ளத்தை வெளியே ஓடச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புகளுக்கு கோரிக்கை விடுத்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லையே — என்று அகதி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் கவலையுடன் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க — அரியாலை டயக் வீடமைப்புத் திட்ட அகதி முகாமில் வாழும் சுமார் 168 பேர் மலேரியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

(அ-17)

# கொழும்பு பல்கலைக்கழகம் 10ஆம் திகதி திறக்கப்படும்

கொழும்பு, டிச. 5

கொழும்புப் பல்கலைக்கழகம் எதிர்வரும் பத்தாம் திகதி வியாழக்கிழமை மீண்டும் திறக்கப்படவிருக்கிறது.

கடந்த மாதம் 16ஆம் திகதி இப்பல்கலைக்கழகம் மூடப்பட்டது தெரிந்ததே.

மீண்டும் பல்கலைக்கழகத்தைத் திறக்கும் முடிவு நேற்று முன்தினம் நடந்த பல்கலைக்கழகக் கவுன்ஸிலின் விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

(உ-எ)

## நூல் அறிமுகம்

வல்வெட்டித்துறை, டிச. 5

வல்வை அனந்தராஜ் எழுதிய 'அறிவியல் உண்மைகள்' என்ற நூல் அண்மையில் உடுப்பிட்டி அ. மி. பாடசாலையிலும் வல்வை கல்வி மன்றத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

(உ-155)

## பயிலுநர் ஆசிரியர் பயிற்சி

கொழும்பு, டிச. 5

பயிலுநர் ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் சுமார் 7 ஆயிரம் பட்டதாரிகளுக்கு 43 நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படவிருக்கின்றது.

இத்தகவலை கல்விச் சேவைகள் சபைத் தலைவர் ஜோர்ஜ் பெண்டிஸ் தெரிவித்தார்.

(உ-எ)


# சிவாகி

சாவகச்சேரி.

யாழ். பல்கலைக்கழகத்துக்கான வெளிவாரிப் பட்டப்படிப்பு

**G. A. Q.**

**1st in Com.**

ஆரம்பம்: 09 - 12 - 1992 மாலை 4 மணி

அனுமதிகளைப் பெற முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

★ புதிய 1993 ஆண்டுக்கான ஆண்டு 9, 10, 11 வகுப்புக்கள் ஆரம்பம் 10 - 12 - 1992 மாலை (4 மணி)

★ 1993 Aug. வினா - விடை வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

(இ-3846)


# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



## திருமதி வனிதா பேரம்பலம்

மலர்வு: 1961 — 03 — 27

மறைவு: 1992 — 11 — 05

"செழிப்பான நிலைமைக்காய்
சிறப்பாக உழைத்த எம் செல்வமே!
மறக்காத நினைவுடன் - நின்
ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்"

அன்னாரின் மரணச் சடங்கிலும், அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர் நண்பர்கள், மாணவர்கள், அறிஞர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

உங்கள் பிரிவால் வாடும்!
அன்புக் கணவர், பிள்ளைகள்,
தாய், சகோதர, சகோதரிகள்.

புலோப்பளை மேற்கு,
அல்லிப்பளை, பளை.

(5618)


# வர்த்தகர்களுக்கு!

# முக்கிய அறிவித்தல்

பாண் வியாபாரம் செய்யும் சகல வர்த்தகர்களும் தங்களது வியாபார இடத்தில், பேக்கரி உரிமையாளர் சங்கத்தினால் வழங்கப்பட்ட பாண் விளம்பரத் துண்டுப் பிரசுரம் ஒட்டி இருத்தல் வேண்டும். இதுவரை ஒட்டாதவர்கள் பாண் வழங்கும் பேக்கரி உரிமையாளர்களிடம் இருந்து பிரசுரம் பெற்று ஒட்டிக் கொள்ளவும். ஒன்றிற்கு மேற்பட்ட பேக்கரிகளில் பாண் எடுத்து விற்பவர்கள் ஒவ்வொரு பேக்கரியினதும் துண்டுப் பிரசுரம் ஒட்டியிருத்தல் வேண்டும். சங்க விதிமுறைகளுக்கு அமைவாக, பாண் விளம்பர துண்டுப் பிரசுரம் ஒட்டாதவர்கள் பாண் விற்பனை செய்ய முடியாது. இது கண்டுபிடிக்கப்பட்டால் எந்த பேக்கரியிலிருந்தும் பாண் விநியோகம் நடைபெறமாட்டாது.

இவ் விளம்பரம் பொது மக்களின் நன்மை கருதி பிரசுரிக்கப்படுகின்றது. இவ் விடயத்தில் பொது மக்களின் ஒத்துழைப்பினையும் நாடி நிற்கின்றோம்.

செயலாளர்,
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.
மணியம் கட்டடம்,
முதலாம் மாடி,
விராவ்லி வீதி, யாழ்ப்பாணம்.

(28508)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.


## விஞ்ஞானபீடம்

1991/92ஆம் கல்வியாண்டிற்கான வகுப்புகள் 1992 - 12 - 07ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால், விஞ்ஞானபீட மாணவர்கள் அனைவரும் அன்றே சமுகமளிக்கவும். வகுப்புகள் தொடங்கிய மூன்று வாரங்களுள் சமுகமளிக்காவிடின், கல்வியைத் தொடர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

- பதிவாளர்.

(அ-3952)


# 14ஆவது வருட இதய அஞ்சலி



மங்கள மலர்வு: 24 — 08 — 1956

அகால உதிர்வு: 05 — 12 — 1973

அமரர்

## கந்தையா சச்சிதானந்தன்

(R. P. C. 4943)

அன்னாரின் ஆன்மா சாந்தியடையும் வண்ணம் பிரார்த்திக்கும்!

— குடும்பத்தினர்.

கரப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
05-12-1992.

(23504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்டுசுட்டானில் நெற்பயிர் புழுத் தாக்கத்தினால் அழிவு

### காப்பு நடவடிக்கை உடன் தேவை

யாழ்ப்பாணம், டிச. 5

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நெற்பயிர்கள் பெருமளவில் அறக்கொட்டியான் புழுத் தாக்கத்தால் அழிவுற்று வருவதால் அதனைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் விவசாயிகளைக் கேட்டிருக்கிறது.

குனோர்பைறிபொஸ் - 20 E. C அல்லது மொனோதையன் அல்லது மொனோகுரோட்டோபொஸ் ஆகிய மருந்துகளில் ஒன்றை போத்தலில் சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் பாவித்து இப்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும்படி கேட்கப்பட்டுள்ளது.

புழுவின் தாக்கம் இரவிலேயே அதிகமாக இருப்பதால் இம்மருந்தை மாலை வேளைகளிலேயே விசுறுவது சிறப்புடையது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

பாரம்பரிய முறைப்படி — வயலில் பயிரை மூடும் அளவுக்கு நீரைக் கட்டி வைப்பதன் மூலமும் நீரின் மேல் சில துளி மண்ணெண்ணெய் தெளிப்பதன் மூலமும் இத் தாக்கத்தைப் பெருமளவு கட்டுப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

ஏனைய பிரதேச மக்களும், நெல் வயல்களையும் சிறுதானியப் பயிர்களையும் கவனித்து ஏற்ற பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும் படியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் மக்களைக் கேட்டிருக்கிறது.

(உ)

## சந்திர கிரகணம்

கொழும்பு, டிச. 5

இம் மாதம் பத்தாம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 2.25 மணிக்கும் காலை 8 03 மணிக்கும் இடையில் பூரண சந்திர கிரகணம் இடம்பெற இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதனை அனைவரும் பார்க்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-எ)

## 8 குடும்பங்களுக்கு உதவி!

வலிமேற்கு, டிச. 5

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு வீடுகள் அமைத்த 8 குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாவை நன்கொடையாக யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அண்மையில் வழங்கியது.

(த-175)

## பாலகன் பலி

சங்கத்தானை, டிச. 5

சாவகச்சேரி தனங்கிளப்பில் ஒன்றரை வயதுப் பாலகன் ஒருவன் நேற்று முன்தினம் கிணற்றில் தவறுதலாக விழுந்து மரணமானான்.

கந்தசாமி சுஜந்தன் என்ற பாலகனே பலியானவராவான்.

(க)

## சீவல் தொழிலாளருக்கும் காப்புறுதித் திட்டம்

தென்மராட்சி, டிச. 5

யாழ். மாவட்ட சீவல் தொழிலாளர்கள், அடுத்த ஆண்டு முதல் காப்புறுதி நலன்புரித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இத்திட்டத்தில் சேர்வதற்கான படிவங்கள் அந்தந்தப் பகுதி தென்னை-பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தினால் விவசாய காப்புறுதிச் சபைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

(க-117)

## விடுவிப்பு

கொழும்பு, டிச. 5

பதுளை, மசறைப் பகுதிகளில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட 13 தமிழ் இளைஞர்களும், 2 யுவதிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தலையீட்டைத் தொடர்ந்து இவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

## பனை ஓலை தட்டிகள்

கொக்குவில், டிச. 5

வீடுகள், கடைகள் மற்றும் பொது ஸ்தாபனங்களில், அவ்வேண்டல் சாதன "சீற்" பயன்படுத்தப்படவேண்டிய இடங்களில், பனை ஓலைப் பாயிலான தட்டிகள் பயன்படுத்தப்படுவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

கரை உள்ள "சீற்" மற்றும் மறைப்பு அறைகளைப் பிரித்தல் ஆகியவற்றிற்கே பாய்த்தட்டி பயன்படுத்தப்படுகின்றது.

(த-69)

## வீதிகள் புனரமைப்பு

குருநகர், டிச. 5

யாழ். பஸ் நிலைய முன்பாகவுள்ள முனீஸ்வரன் வீதி மற்றும் கன்னாதிட்டி பெருமாள் கோவிலடி வீதி ஆகியன புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ். - பிரதான தபாலகத்திற்கு எதிராக [illegible] வீதியின் ஒரு பகுதியும் புதிய முறையில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

(த-51)


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

★ A/L கலை, வர்த்தகம் ★

93 வினா - விடை

DAY CLASSES

புதிய பிரிவு - III

ஆரம்பம்: 10 - 12 - 1992

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. க. சுபாகரன் |
| கணக்கியல் | — | திரு. S. K பிரபாகரன் |
| வர்த்தகம் | — | திரு R இரகுநாதன் |
| அளவையியல் | — | திரு. A பிரபாகரன் |

★ மாலை வகுப்பு

இந்துநாகரிகம் — திரு. காரை. - சுந்தரம்பிள்ளை

— பிரிவு - I இல் மீட்டலும்

— பிரிவு - II அலகு 1இலிருந்து பாடத்திட்டமும் போதிக்கப்படுகின்றன.

(இ-3847)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 06 — 1926



மறைவு: 05 — 11 — 1992

அமரர்

# வேலுப்பிள்ளை நாகமணி

(முன்னாள் இ. போ. ச. சாரதி)

பார்புகழும் பண்புடனே பாடுபட்டு - காப்பாற்றி
எமை வளர்த்த எங்கள் அன்புத் தெய்வமே!
நசன் மலரடியில் உங்கள் ஆத்மா-
சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

449, இராமலிங்கம் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(23488)



# MATHS CENTRE

NELLIADY

கல்வியாண்டு 93க்குரிய

புதிய வகுப்புக்கள்

ஆண்டு: 4, 5, 6, 7, 8, 9, 10, 11

ஆரம்பம்: 05 - 12 - 92

சனிக்கிழமை பி. ப. 2-15

(5622)



# கல்வி ஆண்டு 1993

THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

O/L Dec. 93

ஆண்டு 4 - 10 வரை

(புதிய பிரிவுகள்)

டிசம்பர் 6-ல் ஆரம்பம்

★ புதிய அனுமதிகள் எதுவும் டிசம்பர் 31க்குப் பின் வழங்கப்படமாட்டாது.

★ முன் கூட்டியே பதிந்து உங்கள் இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

"20 வருட சேவையில் உயர்ந்து விளங்கும் உன்னத நிறுவனம்"

(5625)



நாவலர் கல்விக் கழகம்

NAAVALAR KALVI KALAHAM

# நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ஆண்டு 1 முதல்
ஆண்டு 11 (O/L) வரை

புதிய வகுப்புக்கள்

ஆரம்பம்: 05 - 12 - 1992

(சனிக்கிழமை) பிற்பகல் 3 மணி

## O/L (1993)

யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | ரி. எஸ். எஸ். மோகன் |
| கணிதம் | — | பேரின்பநாதன் |
| | — | பி. நெல்க்கன் |
| சமூகக்கல்வி | — | கே. எஸ். முத்துலிங்கம் |
| தமிழ் | — | ஆனந்தன், பைரவி |
| ஆங்கிலம் | — | சிவலிங்கம் |
| சமயம் | — | ரூபி |
| வர்த்தகம் | — | கே. சத்தி |

★ ஆண்டு 4, 5 புலமைப்பரிசில் பரீட்சை ★ வகுப்புக்கள்:

| | | |
|---|---|---|
| தமிழ் | — | சி. குழந்தைவேலு |
| கணிதம் | — | ரி. எஸ். குண[illegible]ளன் |

அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்[illegible]யவும்

(இ-3950)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## பெரும் பொய்!

வடக்கு - கிழக்கில் யுத்த நிலைவரம் ஒன்றை அரசாங்கம் பிரகடனம் செய்யவில்லை. ஆனால் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில்தான் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பாதுகாப்புத் துணை அமைச்சரும், பிரதமருமான டி. பி. விஜேதுங்கா கூறியிருக்கிறார். சுதந்திரக் கட்சி எம்.பி. யான திரு. சி. வி. குணரத்ன நாடாளுமன்றத்தில் கேட்ட வினாவொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இந்தப் பதில் முழுப் பூசனிக்காயைச் சோற்றில் புதைக்க எடுக்கப்படும் முயற்சி போன்றது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை மூண்டது. எனினும் அமைச்சர் ஹமீது யாழ்ப்பாணத்தில் அந்த மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஜூன் 16 ஆம் திகதி மாலை ஆறு மணியுடன் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் அரசாங்கப் படைகள் பேச்சுவார்த்தையின் போது இணங்கப்பட்ட நிபந்தனைகளைப் புறக்கணித்து சண்டை நிறுத்தத்தை மீறின. அதனால் சண்டை நிறுத்தம் முறிந்தது. அதனைத் தொடர்ந்து திரு. விஜேதுங்காவின் பதவியை அப்போது வகித்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின ஜூன் 18 ஆம் திகதி மாலை தொடக்கம் வடக்கு-கிழக்கில் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தினார்.

வடக்கு - கிழக்கில் முழு யுத்த நிலை ஏற்பட்டுள்ளதாக 18 ஆம் திகதி இரவு அமைச்சர் ரஞ்சன், பி. பி. ஸிக்குத் தெரிவித்திருந்தார்.

கடந்த முப்பது மாதங்களாக முழு அளவிலான போரை நடத்திக் கொண்டு, வடக்கு-கிழக்கில் யுத்த நிலைவரம் ஒன்றைப் பிரகடனம் செய்யவில்லை என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? இதனை விட மிகப்பெரிய பொய் உலகத்தில் வேறு எதுவும் இருக்க முடியாது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் மட்டும்தான் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று அவர் சொல்கிறார். இது உலகத்தை ஏமாற்றுவதற்காக அரசாங்கத் தரப்பினர் அனைவரும் கடந்த இரண்டரை வருடங்களாகத் தொடர்ச்சியாகக் கூறிவரும் அப்பட்டமான பொய்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமே இராணுவ நடவடிக்கைகள் என்றால் முப்பதாயிரம் தமிழ்ப் பொது மக்களும் எப்படி இறந்தார்கள்? லட்சக் கணக்கான தமிழர்கள் தமது சொந்த இடங்களை விட்டு அகதிகளாக மாறி இருப்பது எதனால்?

விடுதலைப் புலிகள் மக்களோடு மக்களாக இருக்கிறார்கள். அவர்களைத் தாக்க முயலும்போது பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்று அரசு கூறக்கூடும். தாக்குதல்கள் பொதுமக்களைப் பாதிக்கின்றன என்று அறிந்தும் அவற்றைத் தொடரும்போது அது மக்களுக்கு எதிரான யுத்தமே அன்றி வேறென்ன?

## யாழ். மாநகரசபை அபிவிருத்தித் திட்டம்

வண்ணார்பண்ணை, டிச 5

யாழ். மாநகரசபை அலுவலகமும், நூலகமும் தற்போது அமைந்துள்ள 5 ஏக்கர் விஸ்தீரணமுடைய பகுதி அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றது.

இதற்காக மாநகரசபை வளவில் உள்ள பற்றைகள் அகற்றப்படவிருக்கின்றன. புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டிய அமைப்புகள் தொடர்பான வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

பலன்தரும் மரங்களை நடுதல், புதிய இரு வீதிகளையும், வீதி வளைவுகளையும் அமைத்தல் ஆகியன இவ் வேலைத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டம் அடுத்த ஆண்டு ஜனவரியில் செயற்படுத்தப்படும்.

[உ-ச-162]

## இன்று....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]
லோ மாணிக்கம் திருமதி செல்வநாயகி செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்வர். [ச-155]

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பணிபுரியும் கிராம சேவை அலுவலர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

சுகநல சேவைத்திட்டங்களை சமூக மட்டத்தில் சிறப்பாகச் செயற்படுத்துவதில் கிராம சேவை அலுவலகர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் இக்கருத்தரங்கு நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-162]

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ். மாவட்டத்தின் போஷாக்கு நிலைவரம் பற்றிய ஆய்வுக்கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா தலைமையில் பல்கலைக்கழக சபை மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இவ்விடயத்தில் ஆர்வமுள்ளவர்களும் கலந்துகொண்டு ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும், எமது மாவட்டத்தின் போஷாக்கு நிலைபற்றிய விவரமான தகவல்கள், கருத்துக்கள் ஆகியவற்றையும் வழங்கி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

★ ★ ★

குருநகர், டிச. 5

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் "வனைகாயதி" இசை நாடகம் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மேடையேறும். [ஒ-51]

★ ★ ★

தென்மராட்சி, டிச. 5

மிருசுவில் புனித நீக்கிலாஸ் தேவாலய வருடாந்த நவநாள் உற்சவ திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப் பூஜையும் இன்று சனிக்கிழமை மாலையும் திருநாட்பலிப் பூஜையும், திருச்சொரூப பவனியும் நாளை ஞாயிறு காலையும் இடம்பெறும்.

[இ-117]

# இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிகளுக்குகடிதங்கள்

## மாதம் இருமுறை அனுப்ப ஏற்பாடு

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாதகல், இளவாலை, பன்னாலை, தெல்லிப்பழை, கொல்லன்கலட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கான சாதாரண கடிதங்களை மாதத்தில் இரு முறை எடுத்துச் செல்ல செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் —

மேற்படி பகுதிகளில் வசிக்கும் மக்களுடன் கடிதத் தொடர்பை மேற்கொள்ள விரும்புவோர் பூரண விலாசத்துடன் கடிதங்களை தபாற்பெட்டிகளில் சேர்க்கும் படியும் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. மு. சேதுகாவலர் அறிவித்துள்ளார்.

மேலும் இப்பகுதிகளுக்கான கடிதங்கள் அனைத்தும் சாதாரண கடிதங்களாகவும் —

'மாதகல் (நியம Proper)', 'இளவாலை (நியம Proper)', 'பன்னாலை (நியம proper)', 'தெல்லிப்பழை (நியம Proper)', கொல்லங்கலட்டி (நியம Proper)', என விலாசமிடப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். [உ-162]

# 41 தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து காவலில்

வத்தளையில் இருந்து நீர்கொழும்பு கொச்சிக்கடை வரையான பிரதேசத்தில் தமியிருந்தபோது கைது செய்யப்பட்ட 119 தமிழ் இளைஞர்களில் 41பேர் மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர் என்றும் எஞ்சியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்புப் பொலீஸின் விசேட புலனாய்வுப் பிரிவு இந்த இளைஞர்களைக் கைது செய்திருந்தது.

விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் நடமாட்டங்களை பொலீஸார் கண்காணித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# புலிகளின் வெடிகுண்டுகளை கண்டுபிடிக்க 10 நாய்கள்

## ஆஸியிலிருந்து தருவிப்பு

கொழும்பு, டிச. 5

துப்பறிவதில் மிகவும் பயிற்சி பெற்ற பத்து துப்பறியும் நாய்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து விமான மூலம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மற்றும் தேவையான இடங்களிலும் விடுதலைப் புலிகளையும் குண்டுகளையும் மற்றும் தேவையான இடங்களையும் கண்டுபிடிப்பதில் இவை ஈடுபடுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரதேச பணிமனைகளுக்கு மேலும் அதிகாரங்கள்

கொழும்பு, டிச 5

பிரதேச செயலர் பணிமனைகளுக்கு 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து மேலும் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகபொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

புனர்நிர்மாண புனர்வாழ்வு சமூகநலன் அமைச்சின் முக்கிய சில பணிகள், பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறீஸ்தவ சமயங்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தல், அத்தகையோருக்கான ஒன்றிணைந்த உதவித் திட்டத்தை செயற்படுத்துதல், பாதிப்புற்ற குடும்பங்களை மீளக் குடியமர்த்தி நஷ்டஈடு பெற்றுக் கொடுத்தல், வெள்ளம், வரட்சி, தீவிபத்து, மண்சரிவு, தொற்று நோய் போன்றவற்றுக்கு நிவாரணம் வழங்குதல், அழிக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், அரச நிறுவனங்கள், கைத்தொழில் ஸ்தாபனங்கள் ஆகியவற்றை புனரமைத்தல், தமிழ் நாடகம், இசை, நுண்கலை ஆகியவற்றை மேம்படுத்துதல், சாகித்திய விழாக்களை ஒழுங்கு செய்ய உதவி செய்தல், ஆட்பதிவுச் சட்டத்தின் கீழ் அடையாள அட்டைகள் வழங்குவதற்கும், குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் கடவுச் சீட்டு வழங்குவதற்குமான விண்ணப்பங்களை சீர்படுத்துதல் போன்ற முக்கிய கடமைகள் வழங்கப்பட்டுள்ளன. [உ-175]

# யாழ். விவசாயிகளுக்கு 'கெயர்' ஸ்தாபன உதவி

உரும்பராய், டிச. 5

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 7ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு கெயர் ஸ்தாபனத்தின் உதவி இந்த ஆண்டு கிடைக்கவுள்ளது.

இதன் மூலம் 3ஆயிரம் நெற்செய்கையாளரும் 4ஆயிரத்து 500 மரக்கறிச் செய்கையாளரும் பயனடைவர். இவர்களுக்கு விதை பொருள்களும் உரம், மண்ணெண்ணெய் ஆகியனவும் கடனாக வழங்கப்படும்.

விளைச்சலின் பின்பு இப்பணம் முழுமையாக அறவிடப்படும் என அறியவருகின்றது.

இதே நேரத்தில் மரக்கறி உற்பத்தி செய்வோர் பயறு, கௌபி போன்ற தானியங்களையும் பயிரிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (உ-ச-154)

## ஆசிரிய மாணவர் பரீட்சை அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், டிச 5

பலாலி, கோப்பாய் கலாசாலைகளின் ஆசிரிய மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

விமானமூலம் எடுத்து வரப்பட்ட அனுமதி அட்டைகள் நேற்று யாழ். கல்வி அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டன.

எதிர்வரும் 28 ஆம் திகதி
(8 ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞருடன் சந்திரலேகா சந்திப்பு

சென்னை, டிச. 5

தமிழ்நாடு ஜனதாக் கட்சித் தலைவர் திருமதி சந்திரலேகா கடந்த புதன்கிழமை தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியைச் சந்தித்து 30 நிமிடங்கள் பேசினார்.

முன்னாள் ஐ. ஏ. எஸ். அதிகாரியான திருமதி சந்திரலேகா இனந்தெரியாத நபர்கள் நடத்திய அசிட் வீச்சுக்கு இலக்கானதும் —

அதன் பின்னர் அவர் தமிழ் நாடு அரசியலில் பிரவேசித்திருப்பதும் தெரிந்ததுவே.

[ஒ-எ]

## றொனி டி மெல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது காலமாக இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அல்லது அதற்கு முன்பதாக 20 லட்சம் ரூபாவை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டி றொனி டி மெலுக்கு எதிராக அரச வழக்கறிஞரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை முன்னெடுத்துச்செல்ல அரச வழக்கறிஞர் விரும்பாததால் றொனி டி மெல்லை விடுதலை செய்வதாக நீதியரசர் வீரசூரிய தெரிவித்தார்.

றொனி டி மெல்லுக்கு எதிரான இரண்டாவது வழக்கையும் வாபஸ் பெறுவதாக நீதிமன்றத்தில் அரச வழக்கறிஞர் தெரிவித்தார்.

திரு. றொனி டி மெல் 1970 முதல் 1977 வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி நடத்தியபோது அமைச்சராக இருந்தார்.

1977 இல் ஸ்ரீ. ல. சு. கட்சியிலிருந்து அவர் இராஜினாமா செய்து ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார்.

1977 தொடக்கம் 1987வரை ஐக்கிய தேசியக் கட்சி அரசில் நிதி அமைச்சராகப் பணியாற்றினார்.

1987 இல் ஐ. தே. க.விலிருந்து விலகிய அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மீண்டும் ஆதரவளித்தார். 1989 தேர்தலில் அக்கட்சிக்கே அவர் ஆதரவளித்தார். எனினும் தேர்தல் முடிவு வெளியானதும் அவர் நாட்டை விட்டு வெளியேறினார்.

இம்மாதம் அவர் நாடு திரும்ப உள்ளார். அவர் மீண்டும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வரென அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [இ-எ-3-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம் நோக்கி வானில் சென்ற தமிழர்கள் கைது

கொழும்பு, டிச. 5

கதிர்காமம் நோக்கி வானில் சென்று கொண்டிருந்த 14 தமிழ் இளைஞர்களை இரண்டு தனித்தனி சம்பவங்களில் பொலிஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

வான் ஒன்றில் கதிர்காமம் சென்று கொண்டிருந்த 3 தமிழ் இளைஞர்களை அம்பாந்தோட்டைப் பொலிஸார் கைது செய்தனர் என்றும்—அம்மூவரும் வட பகுதியில் இருந்து கொழும்பு வந்து வெள்ளவத்தையில் தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு சம்பவத்தில் கதிர்காமம் நோக்கி வானில் சென்று கொண்டிருந்த 14 தமிழ் இளைஞர்களை தம்சாலைப் பொலிஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஜெரி டி சில்வாவுக்கு சேவை நீடிப்பு

கொழும்பு, டிச. 5

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பிரதம நிர்வாக அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் பதவிக்காலம் 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜெரிடி சில்வா அடுத்த மாதத்தில் ஓய்வுபெற இருந்தார். இவர் 1960 ஆம் ஆண்டில் இராணுவத்தில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

# கொப்பேகடுவ மரணத்துக்கு புலிகளே காரணம்

## லோறன்ஸ் திலகர் வலியுறுத்து

கொழும்பு, டிச. 5

"விடுதலைப் புலிகள் அராலித்துறை நிலக்கண்ணிவெடியில் இலங்கை கொப்பேகடுவவும் ஏனைய இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். இந்தக் குண்டு வெடிப்புக்கு அப்போதே உரிமை கோரி இருந்தோம்"

புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகர் நேற்று பாரிஸில் இருந்து கொழும்பில் உள்ள செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு தொலைபேசி மூலம் இதனைத் தெரிவித்தார்.

திருமதி கொப்பேகடுவ தெரிவித்த கருத்தை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தமது கணவர், அவர் பயணம் செய்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததினாலேயே கொல்லப்பட்டார் என்று திருமதி கொப்பேகடுவ தெரிவித்திருந்தார்.

இச்சம்பவம் பற்றி விசாரிக்க சர்வதேச விசாரணைக்கமிஷன் அமைக்கப்படுவதை வரவேற்பதாகவும் லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

### ஆசிரிய...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி இரு கலாசாலைகளின் இறுதிப் பரீட்சைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

## 'குமண'வில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணம், டிச. 5

இம்மாத இறுதியில் பருத்தித்துறைக்கு வரும் 'குமண' கப்பலில் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்க 10லட்சம் பாடப் புத்தகங்கள் எடுத்து வரப்படவிருக்கின்றன.

இந்தக் கப்பலில் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகளும் எடுத்துவரப்படவிருக்கின்றன. (இ-3)

## ஜெயலலிதாவுக்கு சம்மன்ஸ் அனுப்ப கோரிக்கை

சென்னை, டிச. 5

முதலமைச்சர் ஜெயலலிதாவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் விதத்தில் அவருக்கு சம்மன்ஸ் அனுப்பப்பட வேண்டும்.

இப்படி தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார். (இ-எ)

## ரங்கராஜன் புதிய தலைவர்

புதுடில்லி, டிச. 5

இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய தலைவராக பிரபல பொருளாதார நிபுணர் திரு. சி. ரங்கராஜன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தற்போது தலைவராக இருக்கும் திரு. எஸ். வெங்கடரமணனின் பதவிக்காலம் இம்மாதம் 23 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

பம்பாய் பங்குச் சந்தை ஊழல் தொடர்பாக திரு. வெங்கடரமணனும் நிதி அமைச்சர் டாக்டர் மன்மோஹன் சிங்கும் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிவருவது தெரிந்ததே. (அ-எ)

## அஞ்சல் அடையாள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிச்சத்தில், தமது காரியாலயங்கள் இயங்குவதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பரீட்சார்த்திகள் தமது அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக நாளை ஞாயிற்றுக்கிழமையும் சகல அஞ்சலகங்களும் காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை விநியோக வேலைகளில் ஈடுபடும் என்றும—

உபஅஞ்சல் அலுவலகங்கள் மூலமாக அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் கட்டுப்பாட்டுக் காரியாலயத்தில் அவர்களது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். என்றும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-162)

# மரண அறிவித்தலகள்

## கந்தர் தம்பியப்பா

(திருநெல்வேலி)

கந்தர் தம்பியப்பா அவர்கள் 27-11-92 இல் காலமாகிவிட்டார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், செந்தில்நாதன் (ஓமான்) கமலவேணி, விமலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுப்புலட்சுமி, சுப்பிரமணியம் (மின்சாரசபை, கொழும்பு), பாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், வைசவயா, ஆல்யா, செந்தூரன், றஞ்சினி - பகிரதன் (டென்மார்க்), சிவகாசன் (ஓமான்), சண்முகதாசன் (சுவிஸ்), தவாவினி கிருபாகரன், ஹரிகரன், விக்கிரகுமார் (கனடா), சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிச்சடங்குகள் இன்று காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் காலை பத்து மணிக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி.

த. செந்தில்நாதன் (மகன்)

(23518)

## சரஸ்வதி சரவணமுத்து

பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி சரஸ்வதி சரவணமுத்து (இளைப்பாறிய ஆசிரியை பண்டத்தரிப்பு, இந்துக் கல்லூரி), காலமாகிவிட்டார். இவர் சரவணமுத்துவின் (இளைப்பாறிய பிரதம லிகிதர் ஹெய்ஸ் குரூப்-இலங்காபேஸ் எஸ். பி.) அன்பு மனைவியும், சுரேந்திரனின் (நோர்வே), அன்புத் தாயாரும் இளைதனாவின் (நோர்வே), அன்பு மாமியும், காலஞ்சென்ற பத்மாவதி (மகாஜனாக் கல்லூரி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), மனோகரன் (தெ. ப. கூ. ச.), கருணாகரன் (கனடா), சந்திரன் (சவூதிஅரேபியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தருமலிங்கம் சிதம்பரம், நாகலிங்கம் சவுந்தரம், காலஞ்சென்ற சரஸ்வதி, துரைச்சாமி கண்மணி, செல்லரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (05-12-92) மாலை 3 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

200, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மு. சரவணமுத்து (கணவர்)

(23512)

## சிவப்பிரகாசம் தெய்வானை

அக்கலைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல. 397, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வானை அவர்கள் காலமாகி விட்டார்.

இவர் சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், சாருமதிதேவி, காலஞ்சென்ற கமலாதேவி, சற்குணானந்ததேவி, பரிமளகாந்தன் (யாழ் தபாற்கந்தோர்), விமலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சொர்ணலிங்கம், பேரின்பநாதன், ஞானசூரியன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிகைக்கொழுந்து, காலஞ்சென்ற இராமலிங்கம், தம்பிஐயா, சின்னத்தங்கச்சி, ராசம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற நாகம்மா, கனகம்மா, துரைசிங்கம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈசன், நாசன், வாசன், ரேணுகா, சதீஸ், பூச்சா, குட்டி சுஜி ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-11-92 அன்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி பரிமளகாந்தன் (மகன்)

397, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(23502)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசம்பு ஜெகதாம்பிகை

(வேலணை கிழக்கு)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி சிவசம்பு ஜெகதாம்பிகை 4-12-92 வெள்ளிக் கிழமையன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வவுனியா 'நாதன் ஸ்ரோர்ஸ்' உரிமையாளர் முருகேசு சிவசம்பு (கைலாசபிள்ளை) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசையா, கனகம்மா ஆகியோரின் அன்பு மகளும், ஜெயந்தி (இந்து மகளிர் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவி), குமாரதாஸ், இராஜினி, கேசவன், தவாரகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற முருகேசு அன்னமுத்துவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராஜேஸ்வரியின் தங்கையும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, அழகேந்திரவதி, இராசையா, இரத்தினம் மற்றும் நடசிவாயம், தம்பிஐயா, சின்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (5 - 12 - 92) சனிக்கிழமை திருநெல்வேலியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று 11 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:

நா. தனேந்திரன். (மைத்துனர்)

இல. 88, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(23510)

## திருமதி ஆறுமுகம் திருவாத்தைப்பிள்ளை

(பண்டார ஆச்சி)

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொக்குவில் வசித்தவருமாகிய ஆறுமுகம் திருவாத்தைப்பிள்ளை 4-12-92 (நேற்று) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், அம்பலவாணர் செங்கமலத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற நமசிவாயத்தின் சகோதரியும், காசிப்பிள்ளை, சிவஞானசுந்தரி, திருநாவுக்கரசு, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-12-92 (இன்று) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி அம்பிகைபாகன் (சரஸ்வதி) (மருமகள்)

செ அம்பிகைபாகன், 68, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(23514)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org